<u>சார்பு நீதிமன்றம், திருவாரூர்.</u>

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**<u>அசல் வழக்கு எண்.39/2021</u>**

வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. திருச்செல்வன் | த/பெ: பக்கிரிசாமி |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 01.04.2026 | தாலுக்கா: |

<u>முதல் விசாரணை...</u>

இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**6 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு பூர்வீகம் திருவாரூர் நகரம் ஆகும். வாதி ரவீந்திரகணேசனுக்கு நான் தாய்மாமா ஆவேன். வாதி எனக்கு உறவினர் என்பதால் அவர் தரப்பில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு விவரம் எப்போது தெரிந்துக்கொண்டேன் என்றால் 2021 ஆம் வருடம் தெரிந்துக்கொண்டேன் தேதி, மாதம் தெரியவில்லை. தாவா சொத்து சம்பந்தமான ஆவணம் பார்த்துள்ளேன். 1902 ஆம் வருடம் திருவாசல் சொத்தை சுப்பையா வாங்கிய கிரய பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அதற்கு முந்தைய ஆவணங்களை பாரத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் குறித்த வரலாறு எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து எங்காவது டிரஸ்ட் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். ரவீந்திரகணேசன் தாவா சொத்துக்களை நிர்வாகம் செய்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தர்மகாரியங்கள் செய்யப்பட்டது என்பதை காட்டும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து அறக்கட்டளை சொத்து என்பதை காட்ட ஆவணம் உள்ளதா என்றால் 1926 ஆம் வருடம்

தர்மகாரியங்கள் என குறிப்பிட்டு ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது. தர்மகாரியங்கள் என உள்ளதா என்றால் இல்லை. 1926 ஆம் வருடம் ஏற்பட்டதாக சொல்லும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்பதால் குறியீடு செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. 1926 ஆம் வருடம் ஏற்பட்ட ஆவணம் குறித்த விவரத்தை முதல்விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் எதுவும் அறக்கட்டளைக்கு சொந்தமானவை அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி சதாசிவம் தாவா சொத்து உள்ள ஊரில் வசிக்கிறார் என்றால் சரிதான். அவர் 1993 ஆம் வருடம் கிரயம் வாங்கியதாக பின்னிட்டு தெரியவந்தது. ரவீந்திரன் பெயருக்கு ஆவணங்கள் ஏற்பட்டதா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. ரவீந்திரன் தகப்பனார் தெட்சிணாமூர்த்தி என்பவர் செய்தித்தாளில் விளம்பரம் கொடுத்திருந்த விவரம் தெரியும். அதை தொடர்ந்து தெட்சிணாமூர்த்தியோ அவரது மகன்களோ சொத்துக்கள் தொடர்பாக உறுத்துக்கட்டளை பரிகாரம் போன்ற வழக்கு தொடரவில்லை என்றால் சரிதான். தெட்சிணாமூர்த்தி இருக்கும் போதே பிரச்னை ஏற்பட்டதால் தான் விளம்பரம் கொடுத்தார் என்றால் பிரச்னை இல்லாததததால்தான் விளம்பரம் கொடுத்தார். ரவீந்திரகணேசன் நிரந்தரமாக தஞ்சாவூரில் வசித்து வருகிறார். டிரஸ்ட்டுகளுக்கு கணக்குகள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எவ்வளவு சொத்துக்கள் டிரஸ்ட்டுக்கு உள்ளது என்பதை காட்ட ஆவணம் உள்ளதா என்றால் வாதி ரவீந்திரகணேசன் வைத்துள்ளார். சர்வே எண் பொறுத்து வாதியிடம்தான் கேட்கவேண்டும். தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை அரசு நில ஆர்ஜிதம் செய்துள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்காக இழப்பீட்டு தொகையை யார் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. கொரோனா காலத்தில் 6 ஆம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளதால் வழக்கு போட்டுள்ளார். வாதி ரவீந்திரகணேசன் எனது அக்கா மகன் என்பதால் நானும் வாதியும் சேர்ந்து வஞ்சகக்கூட்டாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.